**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2023**

----------------------------------------------------------------------------------------------------

யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3603 - எஸ்ஆர்ஜ மற்றும் 3604 - எஸ்ஆர்ஜ (மேலதிக நிதியளிப்பு) ஆம் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வட மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளன. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை பாதுகாத்து முகாமை செய்வதும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அமுல்ப்படுத்தப்பட்ட கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனாகும். அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரிடமிருந்தான கடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது, ஏனென்றால், சுத்திகரிப்பு பொறிக்கு இரணைமடு குளத்திலிருந்து தண்ணீர் வளம் போதாமையால் செயற்திட்ட நோக்கெல்லை மீளமைக்கப்படுகின்றது. எனவே, 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் மேலதிக கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 18,240 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,016 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அபிப்பிராயம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

இலங்கையின் வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக, நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், யாழ்ப்பாண நீர் வள முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல் மற்றும் NWSDB இன் திறன் மேம்பாடு ஆகிய 03 முக்கிய கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்டமானது 2011 பெப்ரவரி 15 இல் அதனது செயற்பாடுகளை தொடங்கி 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. இரணைமடு குளத்திலிருந்து உப்புநீக்கும் நிலையத்திற்கான நீர் வளமூலமாக செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மறுசீரமைத்த பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | செயற்திட்டக் கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | **நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்** | | 100 | 78 | ஒப்பந்த கால எல்லைக்குள் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை, மேலும் நிலைமையைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். | NWSDB மற்றும் செயற்திட்டக் குழு மக்கள் விரும்பிய விளைவுகளை திருப்திப்படுத்துவதற்கு M&E SCADA ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யும் வரை 2024 யூலைக்குள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நீர் வழங்குவதற்கான தற்காலிக நீரேற்று ஏற்பாட்டைச் செய்வதற்கு முயற்சி எடுத்தது. | தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். |
| (i) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் | கடல் நீர் தலைகீழ் சவ்வூடுபரவல் உப்புநீக்கும் ஆலை | 100 | 88 | இந்தக் கூறின் வடிவமைப்பு, உருவாக்கம் மற்றும் செயற்பாட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் உடன்படிக்கை ரூபா 14,559 மில்லியனிற்கு 2023 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு 2021 இல் கைச்சாத்திடப்பட்டது. 100 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான எதிர்பார்ப்பு இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மையான பௌதீக முன்னேற்றம் 88 சதவீதமாக இருந்தது. | ஒப்பந்ததாரர் 2024 யூன் 18 முதல் பரிமாற்ற பிரதானிகள் மற்றும் விநியோக பிரதானிகளை சுத்தப்படுத்துதல் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் பணிக்காக SWRO ஆலையிலிருந்து (ஆரம்பத்தில் 6,000 m³/நாள்) சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை வழங்குவார். | இந்தக் கூறின் பணிகள் பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் | நீர் விநியோக வலையமைப்பை அமைத்தல் | 100 | 100 | நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவுகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு தேவையான குழாய் முறைமை, உயர் நீர் கோபுரங்கள் மற்றும் ஏனைய தேவையான நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் விநியோகத் தோல்வியால் செயற்திட்ட நலன்கள் மக்களைச் சென்றடைந்திருக்கவில்லை. | அந்த மூன்று தீவுகளுக்கான விநியோக வலையமைப்பு பூர்த்தி செய்யப்பட்டு, NWSDB இன் O&M பிரிவில் ஒப்படைக்கப்பட்டது, மேலும் அவர்கள் இதை செயற்படுத்தி, பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்குவது ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |
| (iii) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் | யாழ்ப்பாண நகரப் பகுதியில் நீர் விநியோக வலையமைப்பு அமைத்தல். | 100 | 72 | 264 கிலோமீற்றர் தூரத்திற்கு யாழ்ப்பாண நகரில் சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிப்பதற்காக ரூபா 3,160.20 மில்லியன் ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றுக்கு 2023 சனவரி 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு 2021 சனவரி 08 இல் வழங்கப்பட்டது, எனினும் 72 சதவீத பௌதீக முன்னேற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 191 கிலோமீற்றர் தூரத்திற்கு மாத்திரமே குழாய் பதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. | யாழ்ப்பாண நகரில் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோக இலக்கை தவிர்க்க முடியாத காரணங்களால் அடைந்துகொள்ள முடியவில்லை. | எதிர்பார்த்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |
| (iv) | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் | இயந்திரவியல், மின்னியல் மற்றும் SCADA பொதி | 55 | 5 | ஐ.அ.டொலர் 11.5 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம், 2023 செப்தெம்பர் 4 இல் வழங்கப்பட்டதுடன் 2024 நவம்பர் 06 இற்கு முன்னர் | வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றதுடன் பௌதீக முன்னேற்றம் 5% ஆகும். M&E SCADA ஒப்பந்தம் | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பூர்த்தி செய்யப்பட வேண்டும், எனினும் மோசமான செயலாற்றலான ஏறத்தாழ 5 சதவீதம் இந்தப் பணியில் காட்டப்பட்டது. | 2025 யூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள் ளது. |

## 3. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 3.1 | DN 01, TWTM 01, TWTM 02 ஆகிய இடங்களில் குழாய்கள் பதிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 73 மில்லியன் மீளளிக்கத்தக்க வைப்பு பணிகள் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் கடந்தும் இதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | DN 01 மற்றும் TWTM 01 முறையே சுத்தப்படுத்துதல் மற்றும் கிருமி நீக்கம் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்தத் திருத்தம் ஆகியவற்றை கொண்டிருந்ததால், கழுவுதல் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் போது திருத்தும் பணிகள் இருக்கலாம். எனவே, PMCIU அதை பூர்த்தி செய்த பின்னர் RDA இடம் கோரும். TWTM 02 இற்கு, PMCIU RDA இடமிருந்து வைப்புக்களை மீள்நிரப்பு செய்வதற்கு RDA உடன் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. | வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 3.2 | 2016 திசெம்பர் முதல் கடல் நீரின் தலைகீழ் சவ்வூடுபரவல் உப்புநீக்கும் ஆலை பெறுகை செயன்முறைக்கு ஐந்தாண்டு கால அவகாசம் எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஆலையின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு செலவு 07 ஆண்டுகளுக்கு ரூபா 3,694 மில்லியனாக இருந்ததுடன் கடன் காலம் 2026 யூன் 30 இல் முடிவடையும். ஆனால் செயற்பாடு மற்றும் பராமரிப்பு காலம் 2030 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு பட்டியலிடப்பட்டது, எனவே செயற்திட்ட காலத்திற்குப் பின்னர் மேலே குறிப்பிட்டவாறு பெரிய பணத்தை மேற்கொண்டு பராமரிப்பை பேணுவது ஆபத்தானதாகும். | பெரும்பாலான தாமதம் NWSDB கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது, எனினும் NWSDB பணிகளை பூர்த்தி செய்வதில் ஏற்படும் தாமதத்தைப் பிடிப்பதற்கு கண்காணிப்பை மூடுகிறது. மேலும் PMU செயற்பாட்டு சேவை காலத்தை மேவுகை செய்வதற்கு கடன் இறுதி திகதியை நீடிப்பதற்கு நடவடிக்கையை எடுக்கும். ஏற்கனவே, JKWSSP இன் PMU ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தைக் கூட்டங்களைத் தொடங்கியுள்ளதுடன் ADB கடனுக்கான நடைமுறை திகதி இந்த கடன் காலாவதியாவதற்கு முன்னர் நீடிக்கப்படும். | இந்த ஆலையின் பராமரிப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான நிதி ஆதாரத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3.3 | கடல் நீர் தலைகீழ் சவ்வூடுபரவல் ஆலையின் ஒப்பந்ததாரர் சில வெளிப்புற கட்டுப்பாடற்ற காரணங்களைக் குறிப்பிட்டு மூலப்பொருட்களின் விலை உயர்வுக்காக 2023 மே 22 இல் ஐ.அ.டொலர் 12.7 மில்லியனை கோரியுள்ளார். எனினும், பின்வரும் காரணங்களின் பிரகாரம், விலைப் பணவீக்க சீராக்கங்களைக் கோருவதற்கு ஒப்பந்ததாரர் உரிமையை கொண்டிருக்கவில்லை.<br><br>– ஒப்பந்தத்தின் பிரிவு 8 குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம், FIDIC நிபந்தனையின் பகுதி அ உட்பிரிவு 13.8 இன் பிரகாரம் விலை பணவீக்க சீராக்கங்களை கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரித்தில்லை.<br><br>– ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் நிறைவேற்றப்பட்ட வடிவமைப்பு, உருவாக்கம் மற்றும் செயற்பாட்டு ஒப்பந்தத்தில் உள்ள ஒப்பந்தத் தரவுகளின் 13.8 ஆம் உட்பிரிவின் பிரகாரம் வடிவமைப்பு மற்றும் நிர்மாண கட்டங்களில் பணவீக்கத்தின் விளைவுகளை சீர்செய்ய வேண்டாம் என்று ஒப்பந்ததாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரமின்றி இந்த நிபந்தனைகளை மாற்றுவது, விலை பணவீக்கத்தை சீர்செய்வதற்கான கோரிக்கை அனுமதிக்கப்படாது. | இணங்கப்பட்டது. | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தீர்மானங்களை எடுக்கும் போது உடன்படிக்கையின் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விதிகள், பிரமாணங்கள், முடிவுகள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3.4 | 2020 திசெம்பர் 22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் 38.33 (ஆ) பந்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு, கடல்நீரைப் பயன்படுத்தி உப்புநீக்கும் ஆலைக்கு சக்தி அளிக்க பொருத்தமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விருப்பத்தை அமுல்ப்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 4 மில்லியன் மேலதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சாத்தியவள கற்கைகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விருப்பமாக சூரிய மின்வலு நிலையத்தை நிறுவுவதற்காக நடாத்தப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை முடிவெடுத்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும் இன்னும் தொடர்புடைய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | NWSDB தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியளிப்பு முகவர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு NPD இடம் கோரிக்கை விடுத்துள்ளது. | ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | பொது திறைசேரிக்கு 2016 முதல் 2023 வரை நாட்டிற்கு எந்தவிதமான பொருளாதார நலனும் இல்லாமல் பணவளிப்பு செய்யப்படாத கடன் மீதியின் மீதான கடப்பாட்டுக் கட்டணமாக ரூபா 464.8 மில்லியன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்த கால தாமதம் இந்த நிலைமைக்கு வழிவகுத்தது. | இதுபோன்ற இழப்புகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |